# கிறிஸ்துவின் மணவாட்டி

*சபையை நமக்குச் சித்தரிப்பதில் ஏவுதலானது பலவகையான உருவகக் கூற்றுக்களைப் பயன்படுத்தியுள்ளது. ஒவ்வொரு உருவகமும் சில விசேஷித்த தனிப் பண்பை வலியுறுத்துகின்றது. சபையின் அரசமைப்பை வலியுறுத்த அது ஒரு இராஜ்யமாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஒரு சரீரம் என்ற வகையில், அதன் ஒருமைப்பாடு வலியுறுத்தப்படுகின்றது. இந்தப் பாடத்தில் நாம், சபை கிறிஸ்துவின் மணவாட்டியாகச் சித்தரிக்கப்படுவதைக் காண்போம். பல வசனப் பகுதிகள் இந்தக் கருத்தைப் போதிக்கின்றன, நாம் அவை ஒவ்வொன்றையும் நோக்குவோம். (யோவா. 3:28-30; எபே. 5:22-32; ரோமர் 7:1-4; 2 கொரி. 11:2 ஆகியவற்றைக் காணவும்.) சபையை இந்தச் சித்தரிப்பின் கீழ் நாம் ஆழ்ந்து யோசிக்கையில் பல பாடங்கள் தெளிவாகின்றன.*

## கிறிஸ்துவுக்குத் திருமணம் செய்விக்கப்படுதலின் படிகள்

*சபையை ஒரு இராஜ்யம் என்று கருதுகின்ற பொழுது, மன மாற்றமானது அந்த உவமைக்கு ஒரு வகையில் பொருந்துகின்றது என்று நினைப்பது இயல்பாக உள்ளது. நாம் கிறிஸ்தவர்களாகும் பொழுது, தேவனுடைய இராஜ்யத்தின் உறுப்பினர்களாகின்றோம். சபையை ஒரு குடும்பம் என்று நாம் நினைக்கின்ற பொழுது, உடனடியாக நாம் புதுப் பிறப்பைப் பற்றி நினைக்கின்றோம். அதே வழிமுறையில், சபையை நாம் ஒரு மணவாட்டியாக/மணமகளாக நினைக்கின்ற பொழுது, மனமாற்றத்தின் படிகளை கிறிஸ்துவுக்கு நாம் மணம் முடித்துக் கொடுக்கப்படுதலுக்கான செயல்பாடாக நாம் நினைக்கின்றோம்.*

*இயல்பான திருமணத்திற்கும், கிறிஸ்துவுக்கு சபையைத் திருமணம் செய்து வைப்பதற்கும் இடையில் உள்ள ஒற்றுமையானது குறிப்பிடத் தக்கதாகும். மனம்மாறியவர் முதலில் கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ள வேண்டும். பிறகு அவர் தமது பழைய வாழ்வில் இருந்து மனம்வருந்தி திரும்ப வேண்டும். அடுத்து அவர் மீதுள்ள தம் விசுவாசத்தை மனம்மாறியவர் அறிக்கை செய்ய வேண்டும். பிறகுதான் பிதாகுமாரன் பரிசுத்த ஆவியானவர் பெயராலே ஞானஸ்நானம் பெறும் செயல் வருகின்றது. ஞானஸ்நானமானதை ஒரு ஆணை ஒரு பெண்ணுடன்*

இணைக்கும் சடங்கு ஒன்றுக்கு ஒப்பிடலாம். புதிய கிறிஸ்தவர் ஒருவர் கர்த்தருக்குத் "திருமணம்" செய்து வைக்கப்படுவதென்பது ஞானஸ்நானம் வரையில் நிறைவடைவதில்லை (மாற். 16:16). விசுவாசம் மட்டுமே இருவரையும் விவாக பந்தத்தில் ஒருமைப் படுத்துவதில்லை. ஒரு அறிக்கை யானது திருமணத்தை நிறைவாக்குவதில்லை; சடங்கானது நடத்தப்பட வேண்டும்.

## வேறு துணையில்லை

இரண்டாவது சத்தியம் ஒன்று ரோமர் 7:1-6ல் போதிக்கப் படுகின்றது. அங்கு பவுல், மனம்மாறிய ஒருவர் கிறிஸ்துவுக்குத் திருமணம் முடித்துக் கொடுக்கப்படுவதற்கு முன்பு தம் பழைய துணைவரிடமிருந்து கட்டவிழ்க்கப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார். மோசேயின் நியாயப்பிரமாணம் முந்திய துணைவராய் இருந்ததைப் பற்றிக் கூறியதன் மூலம் அவர் இவ்வசனப் பகுதியில் இதைத் தெளிவாக்கினார். கிறிஸ்துவின் மரணமானது இதிலிருந்து (நியாயப்பிரமாணத்திலிருந்து) நம்மை விடுதலையாக்கிற்று. இப்பொழுது மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட ஒருவரான கிறிஸ்துவுடன் மணம் முடித்து வைக்கப்படுதல் என்பது சாத்தியமானதே. இந்த உண்மையானது கலா. 3:23, 24; கொலோ. 2:14; மற்றும் எபி. 10:9, 10 உள்ளிட்ட மற்ற வசனப் பகுதிகளிலும் நன்கு வலியுறுத்தப்படுகின்றது. ஒரே வேளையில் மோசேயின் பிரமாணத் துடனும், சுவிசேஷத்துடனும் இணைந்திருக்க முயற்சி செய்கின்றவர்கள் ஆவிக்குரிய விபசாரம் செய்யும் குற்றத்திற்கு உள்ளாகின்றனர்.

## கிறிஸ்து ஒரு சபையை மட்டுமே உடையவராய் இருக்கின்றார்

கிறிஸ்து ஒரு சபையை மட்டுமே உடையவராய் இருக்கின்றார் என்பது இந்த உருவகத்தினால் வலியுறுத்தப்படும் மூன்றாவது பாடம் ஆகும். ஒரு சபைதான் இருக்க வேண்டும் என்பதை நான் எனது கருத்திலிருந்து கூறவில்லை; அல்லது ஒரு மாநாட்டில் குழு ஒன்று கூடி ஒரு சபை இருப்பதே சிறந்த தென்று முடிவு செய்யவேண்டுமென்றும் நாம் கூறவில்லை. மாறாக, கிறிஸ்து ஒரு சபையை மட்டுமே உடையவராய் இருக்கின்றார் என்றே புதிய ஏற்பாடு போதிக்கின்றது. இது மத். 16:18 மற்றும் எபே. 5:25 போன்ற வசனப் பகுதிகளில் வலியுறுத்தப்படுகின்றது, இவைகளில் "சபை" என்ற ஒருமை வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த உண்மையைப் பல உருவகக் கூற்றுகளும் கூட விளக்கப்படுத்துகின்றன. கிறிஸ்து ஒரே ஒரு சபையை உடையவராய் இருக்கின்றார் என்ற உண்மையை இயல்பாக வலியுறுத்தும் உருவகங்களைப் புதிய ஏற்பாடு பயன்படுத்துகின்றது. அவைகளில் எவை யொன்றும், இப்பொழுது நாம் கவனிக்கும் கருத்தான சபை என்பது கிறிஸ்துவின் மணவாட்டியாகும் என்ற கருத்தைக் காட்டிலும் பலமானவைகள் அல்ல. கிறிஸ்து பலதார திருமணத்தைக் கண்டனம்

*செய்தார். அவர் ஒன்றைப் பிரசங்கித்து, வேறோன்றை நடைமுறைப்படுத்தினாரா? அவர் பல மனைவிகளைக் கொண்டவரா?*

## *சபையின் தூய்மை*

*நாம் இப்பொழுது இந்த உருவகத்தினால் வலியுறுத்தப்படும் அடிப்படைப் பாடத்திற்கு வருகின்றோம்: சபையின் தூய்மை. சபையை அவருடைய மணவாட்டியாகச் சித்தரிப்பதென்பது, கிறிஸ்து தமது சபை மீது கொண்டுள்ள உயரிய மதிப்பைக் காட்டுவதாய் உள்ளது. அவர் அதைப் பரிசுத்தப் படுத்திச் சுத்திகரித்திருக்கின்றார். அவர் தமது மணவாட்டியின் மீது முழுப்பற்றுக் கொண்டிருக்கின்றார். அவர் அதைத் தமக்குக் கறைதிறையற்ற மகிமையுள்ள மணவாட்டியாக முன்னிருத்திக்கொள்ள விரும்புகின்றார். பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்திருப்பவர்களை ஏற்றுக்கொள்ளக் கிறிஸ்து வருகிறவராய் இருக்கின்றார். அவரது மணவாட்டி(சபை)யானது அசுத்தமான, பரிசுத்தமற்ற மக்களால் ஏற்பட்டதாயிருக்காது. இந்த சத்தியமானது, சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் கிறிஸ்து மறுபடி வருகையில் தம்மீது பிரியப்படும்படியான புதிய வாழ்க்கை வாழ முடிவு செய்வதற்குக் காரணமாக வேண்டும் (எபே. 5:23-35).*

## *முடிவுரை*

*அழகிய மற்றும் தனிச் சிறந்த உட்பொருளால் அறியப்படும் சபை என்பதே கிறிஸ்துவின் மணவாட்டியாகும். பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்ட இந்த விளக்கமானது சபையின் முக்கியத்துவம் பற்றிய மதிப்புமிக்க உட்கருத்துக்களை நமக்குத்தர நாம் அனுமதிப்போமாக.*